සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## வரலாறு - ඉතිහාසය

தரம் : **9** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♦ 1 தொடக்கம் 5 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

(பரணல, கோல்புறூக், மகாபத்தே, பிம்மஞான, திருகோணமலை)

1. ஒல்லாந்தர் கறுவா சேகரித்தல், விற்றல் தொடர்பாக தனிப்பட்ட கப்பித்தான் ஒருவரின் கீழ் மிகத் திறமையுடன் .................................... திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்டு வந்தனர்.
2. ஆங்கிலேயர் இந்து சமுத்திரத்தில் பிரான்ஸியருடன் மேற்கொண்ட கடற்சண்டையின்போது .................................. துறைமுகம் போர் நடவடிக்கைகளில் முக்கியம் பெற்றிருந்தது.
3. ஸ்ரீ விக்ரம இராஜசிங்க மன்னன் இராசதுரோகக் குற்றச்சாட்டின் பேரில் .......................... பிக்குவிற்கு மரண தண்டனை விதித்தார்.
4. பிரித்தானியர் இந்நாட்டில் நிலவிய பொருளாதார முறையை வர்த்தகப் பொருளாதாரமாக மாற்றிக்கொள்வதற்கு .................................................. ஆலோசனையைப் பெற்றுக்கொண்டனர்.
5. இந்நாட்டில் பௌத்த மதத்தை மேம்பாடடையச் செய்யும் பொருட்டு ஒல்கொட் அவர்கள் ......................... சங்கத்தை நிறுவினர்

♦ 6 - 10 வரையிலான ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்பினுள் இடுக.


6. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் மிஷனரி இயக்கங்கள் அமைக்கப்பட்டன. ( )
7. 1862ம் ஆண்டு பௌதர்களுக்கென லங்கோபகார எனும் பெயரில் அச்சகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ( )
8. இந்து சமயத்தினதும் கலாசாரத்தினதும் பெருமையை உணர்த்துவதற்காக உதயபானு எனும் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது ( )
9. ஆங்கிலேயரின் கீழ் இராணுவ சேவையில் இணைக்கப்பட்டிருந்த சிங்களப் படைவீரர்கள் சிப்பாய் இராணுவம் என அழைக்கப்பட்டனர். ( )
10. பிரித்தானிய உற்பத்திகளை பகிஷ்கரித்து இந்திய உற்பத்திகளின் பயன்பாட்டை ஊக்குவித்த அமைப்பு சுதேசி இயக்கம் எனப்பட்டது ( )

♦ 11 - 15 வரையான வினாக்களுக்கு, அட்டவணையை பூரணப்படுத்துவதன் மூலம் விடையளிக்க.

| சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் | போராட்டத் தலைவர்கள் | போராட்டத்திற்கு வழிவகுத்த காரணிகள் |
|---|---|---|
| 1818 | 11.......................................................<br>மடுகல்ல திஸாவ | 13..................................................<br>பிரிதானியர்களின் அதிகாரம் பாதிக்கபட்படல் |
| 12................................................... | கொங்கோலே கொட பண்டா<br>டிங்கி ரால | 14...................................................<br>15.................................................. |

♦ 16 - 20 வரை உள்ள வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

16. பிரான்சியர் இந்தியாவில் தமது அதிகாரத்தை நிறுவிக்கொண்ட பிரதேசம் படத்தில் A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. அப்பிரதேசம் யாது?





1) சந்திர நகர்
2) கரிகால்
3) மதுரை
4) பாண்டிச்சேரி

17. மொகலாயப் பேரரசன் ஒருவரால் கட்டப்பட்ட தாஜ்மகால் எனும் சிறப்பு வாய்ந்த கட்டடம் பின்வரும் உருவில் தரப்பட்டுள்ளது. இதனை நிர்மாணித்த அரசன் யார்?




1) பாபர்
2) ஜவான்கீர்
3) சாஜஹான்
4) மகா அக்பர்

18. சர்வதேச புகழ்பெற்ற பாணந்துரை விவாதத்தில் தலைமை தாங்கிய தேரர் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது. இவரின் பெயர் யாது?



1) இரத்மலானை தம்மாலோக தேரர்
2) மீதெட்டுவ குணாநந்த தேரர்
3) ஹிக்கடுவ ஶ்ரீ சுமங்கல தேரர்
4) வாரியபொல ஶ்ரீ சுமங்கல தேரர்

19. பின்வரும் உருவானது இந்தியாவை பிரித்து பாகிஸ்தானை உருவாக்கப் பாடுபட்ட பெரியார் ஒருவர் ஆவார். அவரை இனங்காண்க.



1) தடபாய் நமரோஜி
2) பாலகங்காதர திலகர்
3) மொஹமட் அலி ஜின்னா
4) மகாத்மா காந்தி

20. 1910ம் ஆண்டு குறுமக்கலம் யாப்பில் முதலாவது சட்டவாக்கக் கழகத்திற்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையர் ஒருவர் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது. அவர் யார்?




1) பொன்னம்பலம் அருணாச்சலம்
2) ஆறுமுக நாவலர்
3) பொன்னம்பலம் இராமநாதன்
4) M.C. சித்திலெப்பை

(20 X 2 = 40புள்ளிகள்)

**பகுதி** II

- ♦ முதலாம் வினா கட்டாயம்
- ♦ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

- முதலாம் வினாவுக்கு இலங்கைப் படத்தைப் பயன்படுத்துக.




*1.* *அ) 1)* A. ஆங்கிலேயரின் கவனத்தை ஈர்த்துக்கொண்ட A எனும் எழுத்தால் அடையாளப்படுத்தியிருக்கும் இயற்கைத் துறைமுகம் யாது?

B. *1818*ம் ஆண்டு சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம் B எனும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது. அப்பிரதேசத்தைப் பெயரிடுக.

C. *1602*ம் ஆண்டு ஜுலை மாதம் ஜொரிஸ் வான் ஸ்பில் பேஜன் இலங்கை வந்திறங்கிய துறைமுகம் குறிக்கப்பட்டுள்ள எழுத்து எது?

D. தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள லுணுவில எனும் பிரதேசத்தைக் குறித்துக் காட்டியுள்ள எழுத்து யாது?

*(4 புள்ளி)*




ஆ) i) பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ள இந்து சமய மறுமலர்ச்சிக்கு தொண்டாற்றிய பெரியார் யார்? *(1 புள்ளி)*

ii) இவர் கொடையாளிகளின் உதவியோடு அமைக்கப்பட்ட பாடசாலை எது? *(1 புள்ளி)*

iii) தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை யாது? *(1 புள்ளி)*

iv) இவரால் மொழிபெயர்க்கப்பட்ட நூல் ஒன்றைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*





இ) ஐரோப்பியர்கள் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்திய பிரதேசங்கள் பின்வரும் இந்திய தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ளன. இதனைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

i) A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள போர்த்துக்கேயரின் நிர்வாக மத்திய நிலையம் யாது? *(1 புள்ளி)*

ii) இங்கு ஒல்லாந்தரின் ஆதிக்கம் பரவிய ஒரிஸா பிரதேசத்தைக் காட்டும் எழுத்து யாது? *(1 புள்ளி)*

iii) போர்த்துக்கெயரால் ஆங்கிலேயருக்கு நன்கொடையாக வழங்கிய மும்பாய் அமைந்துள்ள இடத்தினைக் காட்டும் எழுத்து யாது? *(1 புள்ளி)*

iv) பிரான்சியர் இந்தியாவில் வர்த்தகக் களஞ்சியசாலை யொன்றை நிறுவிய பிரதேசம் இங்கு D எனும் எழுத்தால் குறிக்கப்பட்டுள்ளது. அப்பிரதேசம் யாது? *(1 புள்ளி)*



ஈ) i) இவ்வுருவில் காட்டப்பட்டிருக்கும் நபர் யார்? *(1 புள்ளி)*

ii) இவரால் மேற்கொள்ளப்பட்ட அஹிம்சை வாதப் போராட்ட உத்திகளில் ஒன்றைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

iii) இவர் சுதந்திரப் போராட்டத் தலைவராகக் கடமையாற்றிய நாடு எது? *(1 புள்ளி)*

iv) ‘கேடா இயக்கம்’ எனப்படுவது யாது? *(1 புள்ளி)*

2. i) 1602ம் ஆண்டுக்குப் பின்னர் கண்டி மன்னர்களை சந்திக்க வந்த ஒல்லாந்தத் தூதுவர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

   ii) கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த இறுதிச் சிங்கள மன்னன் யார் எனக் குறிப்பிட்டு, கண்டி இராச்சியம் நாயக்க வம்ச மன்னர்களின் வசமானதற்கான காரணத்தையும் குறிப்பிடுக. (3 புள்ளி)

   iii) நாட்டில் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்த முக்கிய மூன்று பிரிவுகளைக் குறிப்பிட்டு, ஒல்லாந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட நீதிமன்றத் தொகுதியின் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட பெயரையும் குறிப்பிடுக. (5 புள்ளி)

3. i) பின்வரும் கூற்றுக்களுள் ஜோன் டொயிலி சம்பந்தமாக கூறப்பட்டுள்ள கூற்றுக்களை எடுத்து எழுதுக.
   1) 1803 ஆம் ஆண்டு கண்டி ஆக்கிரமிப்பில் கலந்து கொள்ளல்
   2) இராணுவ அதிகாரியாவர்
   3) அரசாங்க மொழிபெயர்ப்பாளர்
   4) சிங்கள மொழியைக் கற்றுத் தேர்ந்தவர்
   5) பிரடரிக் நோத் ஆளுநருக்குக் கீழ் சேவையாற்றியவர்
   6) கண்டியின் முக்கியமான பிரபுக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர். (3 புள்ளி)

   ii) பிரித்தானியரால் இந்நாட்டில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையும் அதனோடு சம்பந்தப்பட்ட பிரதேசங்களும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன. உரிய இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.

| பொருளாதாரப் பயிர் | முதலில் ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம் |
|---|---|
| 1. கோப்பி | 1........................................................... |
| 2. ........................................... | லூல்கந்துர தோட்டம் |
| 3. இரப்பர் | 3........................................................... |

   iii) தேயிலைச் செய்கை இந்நாட்டின் முக்கியமான பொருளாதாரப் பயிராக மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் 2 இனைக் குறிப்பிட்டு விளக்குக. ( 5 புள்ளி)

4. i) 1833ம் ஆண்டு பிரித்தானியரால் இந்நாட்டில் அறிமுகப்படுத்திய யாப்புச்சீர்திருத்தம் யாது? (2 புள்ளி)

   ii) இக்காலகட்டத்தில், உள்நாட்டு விவசாயம் பாதிப்படைவதற்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகள் 3 இனைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

   iii) 1848ம் ஆண்டு சுதந்திரக் கிளர்ச்சிக்குப் பின்னர் குளங்களையும் அணைக்கட்டுக்களையும் புனரமைப்புச் செய்த பிரித்தானிய ஆளுநர்கள் மூவரைத் தருக. (3 புள்ளி)

   iv) விவசாயிகளின் நலன்கருதி ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க இயக்கத்தின் நோக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

5. i) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வந்த மிஷனரி அமைப்புக்கள் மூன்றை எழுதுக. (3 புள்ளி)

   ii) பின்வருவன பௌத்த மறுமலர்ச்சிக்கு வழிகாட்டிய பிக்குகளுக்கு அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட பிரிவெனாக்கள் ஆகும். இங்கு காணப்படும் இடைவெளிகளை பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

| தலைமை வகித்த பிக்குமார்கள் | ஆரம்பிக்கப்பட்ட பிரிவெனாக்கள் |
|---|---|
| வலானே சித்தார்த்த தேரர் | 2.......................................................................... |
| 1...................................................................... | மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனா |
| இரத்மலானை ஸ்ரீ தர்மாலோக தேரர் | 3.......................................................................... |

   iii) பௌத்த மறுமலர்ச்சிக்காலத்தில் ஹென்றி ஸ்டில் ஒல்கொட் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நிறுவப்பட்ட சங்கத்தினைக் குறிப்பிட்டு, இச்சங்கத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த பாடசாலைகள் மூன்றினையும் தருக. (5 புள்ளி)

6\. i) ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்கள் மேற்கொண்ட சிப்பாய்க்கலகத்திற்கு ஏதுவாயமைந்த காரணிகள் மூன்று எழுதுக. *(3 புள்ளி)*

ii) இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சிரேஷ்ட தலைவர் மகாத்மா காந்தியின் அஹிம்சை வாதப்போராட்ட உத்திகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(3 புள்ளி)*

iii) இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய தலைவர்கள் இருவரைக் குறிப்பிட்டு, இவர்களில் ஒருவரைப் பற்றி விளக்குக. *(5 புள்ளி)*

7\. i) ‘இந்தியாவின் மேன்மையாளர்’ எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைவர் யார்? *(1 புள்ளி)*

ii) பின்வருவன இந்தியாவில் சமய மறுமலர்ச்சியை மேற்கொள்ளும் நோக்குடன் தோற்றம் பெற்ற இயக்கங்கள் சிலவாகும். இந்த சமய இயக்கங்களை தோற்றுவித்த சமயத்தவர்களை முன்னால் எழுதுக.

A. பிரம்ம சமாஜம் ............................................

B. சிங் சபை ........................................... *(2 புள்ளி)*


iii) பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புக.

**இடமிருந்து வலம்**

5. பிரான்சியர் இந்தியாவில் நிறுவிக்கொண்ட கோட்டைகளில் ஒன்று
6. நாடுகாண் பயணத்தின் விளைவாக இந்தியா வந்தடைந்த போர்த்துக்கேய இனத்தவர்
7. சர்வதேச பிரசித்தி பெற்ற பௌத்தர்களின் விவாதங்களில் ஒன்று
8. 1818 சுதந்திரப் போராட்டத்தலைவர்களில் ஒருவர்

**மேலிருந்து கீழ்**

1. பௌத்தர்களால் நிறுவப்பட்ட அச்சகங்களில் ஒன்று
2. 1818ம் ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்த பிரதேசம்
3. மொகலாயப் பேரரசுக்கான அத்திவாரம் இம்மன்னனால் இடப்பட்டது.
4. அஹிம்சைவாதக் கொள்கையைப் பின்பற்றிய இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சிரேஷ்ட தலைவர்




*(8 புள்ளி)*